DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the court Judicial Magistrate At Oddanchatram

Case No : STC 534/2021

List of Witness : Lw10

Prosecution Witness : PW6

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | முத்துச்சாமி | ஜாதி: | |
| தந்தை / கணவர் பெயர் : | உடைச்சி | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுகா: | | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969

Examination Date / சாட்சி விசாரணை தேதி :- 16/07/2026

(எதிரி ஆஜர் .)

**அரசு தரப்பில் முதல் விசாரணை :**

நான் தற்போது ரெட்டியார்சத்திரம் காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். எனக்கு சார்பு ஆய்வாளர் சிவராஜா அவர்களின் கையெழுத்து மற்றும் கையொப்பம் எனக்கு நன்கு பரிட்சயம். வழக்கு கோப்பு மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன். சார்பு ஆய்வாளர் சிவராஜா அவர்கள் நிலைய பொறுப்பில் இருந்த போது கடந்த 11.08.2019ம் தேதி காலை 07.00 மணிக்கு அருள்துறை மருத்துவமனையில் இருந்து வந்த தகவலை பெற்று, அருள்துறை மருத்துவமனைக்கு சென்று அங்கு உள் நோயாளியாக சிகிச்சையில் இருந்த பாலாஜி என்பவரிடம் புகார் வாக்குமூலம் பெற்று நிலையம் வந்து அதன் பேரில் நிலை குற்ற எண் 131/2019 பிரிவுகள் 279, 337 இதசவாக வழக்கு பதிவுசெய்து முதல் தகவல் அறிக்கையின் அசலையும் வாதியின் புகாரையும் இணைத்து கனம் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கும் மற்ற நகல்களை சம்பந்தமப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்துள்ளார். **முதல்தகவல் அறிக்கை அ.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்பு அவர் தனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, அன்றைய தினம் 08.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் 1. முத்துச்சாமி, 2.கண்ணன், ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரிவரைபடம், பார்வைமகசர் தயார் செய்து சாட்சிகளை தனித்தனியாக விசாரணை செய்து 161(3) கு.வி.மு.ச.வின் கீழ் வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்பு அன்றைய தினம் சாட்சிகளான பாலாஜி, கண்ணன், ஜெயலெட்சுமி, செந்தில்குமார் ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து 161(3) கு.வி.மு.ச.வின் கீழ் வாக்குமூலங்கள் பதிவுசெய்துள்ளார். பின்பு நிலையம் வந்து ஆஜரான எதிரியை 11.08.2019ம் அன்று 12.00 மணிக்கு ரெட்டியார்சத்திரம் காவல் நிலையத்தில் வைத்து காரணம் கூறி கைது செய்து தக்க

இரு நபர் பிணையில் விடுவித்துள்ளார். பின்பு 13.08.2019ம் தேதியன்று இவ்வழக்கில் வாதி ஓட்டிவந்த TN 57 BF 9154 என்ற எண்ணுள்ள இருசக்கர வாகனத்தையும், எதிரி ஓட்டிவந்த TN 57 N 1856 என்ற எண்ணுள்ள அரசு பேருந்தையும் மோட்டார் வாகன ஆய்வாளரின் ஆய்வுக்காக அனுப்பி ஆய்வு அறிக்கையை பெற்று, மோட்டார் வாகன ஆய்வாளர் விஜயக்குமார் அவர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். **TN 57 BF 9154 என்ற எண்ணுள்ள இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வு அறிக்கை அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. TN 57 N 1856 என்ற எண்ணுள்ள அரசு பேருந்தின் மோட்டார் வாகன ஆய்வு அறிக்கை அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்பு கடந்த 11.08.2019ம் தேதியன்று புகார்தாரர் பாலாஜிக்கு சிகிச்சை அளித்த திண்டுக்கல், JJ அருள் மருத்துவமனை மருத்துவர் அருள்துறை அவர்களை விசாரணை செய்து, 161(3) கு.வி.மு.ச.வின் கீழ் வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். மேற்படி காயம்பட்ட நபருக்கு சிகிச்சை அளித்த திண்டுக்கல், JJ அருள் மருத்துவமனை மருத்துவர் அருள்துறை அவர்கள் அளித்த **காயச்சான்று அ.சா.ஆ. 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி காயம்பட்ட நபருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் அருள்துறை அவர்கள் காயம்பட்டவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என சான்றளித்ததால் சட்ட பிரிவுகளை 279,337 இ.த.ச விலிருந்து 279,338 இதசவாக சட்டபிரிவு மாறுதல் செய்து சட்டமாறுதல் அறிக்கை தயார் செய்து மாண்பு நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்துள்ளார். **சட்டமாறுதல் அறிக்கை அ.சா.ஆ. 8 ஆக குறியீடு செய்யபப்படுகிறது** . பின்பு இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து 07.11.2019 ம் தேதி எதிரி மீது பிரிவுகள் 279,338 இதசவாக குற்ற இறுதியறிக்கை தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

புகார்தாரர் எந்தவிதமான புகாரும் கொடுக்கவில்லை என்றாலும் விசாரணை அதிகாரியே கையொப்பம் மட்டும் பெற்றுக் கொண்டேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி சொன்ன விதத்தில் சொன்ன மாதிரி வழக்கு சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி சம்பவ இடம் செல்லாமலேயே காவல் நிலையத்தில் வைத்து வழக்கின் தோதுக்கு ஏற்ப பார்வை மகஜர் வரைபடம் ஆகிய ஆவணங்கள் தயார் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. இந்த விபத்து சம்பவம் சொன்ன இடம், சொன்ன நேரம், சொன்ன விதத்தில் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. இந்த

விபத்திற்கு காயம்பட்ட நபரே பொறுப்பு என்றால் சரியல்ல. சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் உண்மைக்கு மாறாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

PRAVEENA SUBBARAYAN

Digitally signed by PRAVEENA SUBBARAYAN
Date: 2026.07.16 18:10:36 +0530

Judicial Magistrate
Oddanchatram.
Date : 16/07/2026